## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 43/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமசந்திரன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஆர்வேல் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : கனகம்மாசத்திரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**24.11.2025**

**<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

12. நெடுஞ்சாலை துறையில் இருந்து நான் பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் ஆமாம். நான் போலியான ஆவணங்களை தயாரித்து அதனடிப்படையில் நெடுஞ்சாலை துறையில் இருந்து நான் பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. என்னுடைய சொத்து ஆவணங்களின் அடிப்படையில் பணம் கொடுத்தார்கள். இது தொடர்பாக புலிபாடு ஜெயராம நாயுடு என் மீது நெடுஞ்சாலை துறையில் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த புகார் இன்றுவரை நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. முடிந்துவிட்டது. எப்போது அந்த புகார் முடிந்தது என்றால் அது 2 மாதம் மேலிருக்கும். அவ்வாறு புகார் முடிக்கப்பட்டதற்கான உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 18 ஆன சென்னை உயர்நீதிமன்ற WP No.11185/2023ஐ புலிபாடு ஜெயராமன் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

13. சென்னை உயர்நீதிமன்ற WP No.11185/2023ல் நான் 7ம் எதிர்மனுதாரர் என்றால் ஆமாம். சென்னை உயர்நீதிமன்ற WP No.11185/2023ல் என் தரப்பில் நான் பதில் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். இந்த வழக்கு

நிலுவையில் உள்ளது என்ற விவரத்தை சென்னை உயர்நீதிமன்ற மனுவில் எனது தரப்பு பதிலில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். இந்த வழக்கு நிலுவையில் உள்ளதை கூறிதான் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற WP No.11185/2023 உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகள் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. மேல்முறையீடு நிலுவையில் இருப்பதால் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 18 உத்தரவு இறுதியானது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)